**கவனிக்க.**– *2007.08.10 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1511 - 2007 අගෝස්තු 17 වැනි සිකුරාදා - 2007.08.17

*1511 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | – |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 682 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 684 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | 686 |
| ஏல விற்பனைகள் | 689 |
| நானாவித அறிவித்தல்கள் | – |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஒகத்து 24 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஒகத்து 10 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## ஹம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் கள்ளுத் தவறணை குத்தகை - 2008

ஹம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் முதலாம் இலக்க கள்ளுத்தவறணையில் 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாந் திகதி தொடக்கம் 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையில் சில்லறையாக கள்ளு விற்கும் உரிமை வழங்குவதற்கு நடைமுறையில் இருந்து வரும் நிபந்தனைகளுக்கு அமையவும் 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணை விற்பனை நிபந்தனைகளுக்கு அமையவும் கேள்விகள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திர வைப்புப் பணமாக 5,000 ரூபாவை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டுடன் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தமது சொந்தப் பெயரில் இருக்க வேண்டும். முகவர்கள் அல்லது இலங்கைப் பிரசைகள் அல்லாதவரின் மூலமாகவோ அல்லது 1982.08.20 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள 1982 ஆம் ஆண்டின் கள்ளுத் தவறணைக் குத்தகை சட்டங்களுக்கு அமைய அருகதையற்றவர்களின் கேள்விப்பத்திரம் அனுமதிக்கப்படமாட்டாது.

4. ஒருவர் ஒரு கேள்விப்பத்திரத்துக்கு அதிகமாகவோ அல்லது 5 நபர்களுக்கு அதிகமாக சேர்ந்தோ அத்தவறணைக்கான கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படலாகாது.

5. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் "ஹம்பாந்தோட்டை இல. 1 கள்ளுத் தவறணைக்கான கேள்விப் பத்திரம் - 2008" என தபால் உறையின் மேல் மூலையில் எழுதப்பட்டு பிரதேசச் செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கப்பட்டோ அல்லது தபாலிலோ 2007.09.11 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முன்பாக ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரதாரர்கள், அவைகள் மூடப்படும் நேரத்தில் ஹம்பாந்தோட்டை பிரதேசச் செயலாளர் அலுவலகத்திற்குச் சமுகமளிக்க வேண்டும்.

6. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர்கள் யார் என்பதை அறிந்ததும் அவர் ஒப்பந்த விற்பனை விதிகள் அடங்கிய கேள்விப்பத்திரத்தில் கைச்சாத்திட்டு ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளரினால் குறிக்கப்படும் பணத்தைப் பிணைப் பணமாகக் கட்ட வேண்டும்.

7. ஒரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையோ ஏற்கவோ அல்லது மறுக்கவோ ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு உரிமை உண்டு.

8. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள கேள்விப்பத்திரம் முடிவுறும் திகதி 2007.09.11 மாற்றப்பட்டால், மறுபடியும் கேள்விப்பத்திரம் முடிவுறும் திகதி 2007.10.12 எனக் கருதப்படல் வேண்டும்.

9. மேலதிக விபரங்களுக்கு ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அவர்களிடம் விண்ணப்பித்து தெரிந்து கொள்ளலாம்.

டி. எஸ். பத்மகுலசூரிய,
பிரதேசச் செயலாளர்,

ஹம்பாந்தோட்டை.
பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹம்பாந்தோட்டை
23.07.2007.

### அட்டவணை

### ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத்தவறணை - 2008

| கள்ளுத் தவறணை | பிரிவு | எல்லை | கேள்விப் பத்திரம் முடிவுறும் திகதி | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஹம்பாந்தோட்டை | ஹம்பாந்தோட்டை | 2007.09.11 | மு.ப. 11.00 | பி.ப. 2.00 |
| | | | மு.ப. 10.00 | பி.ப. 5.00 | பி.ப. 8.00 |

9-473

## குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளுத் தவறணைகள் குத்தகை - 2008

2008, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2008 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான கால வறையரைக்குள், பின்வரும் அட்டவணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் முத்திரையிடப்பட்டு அடைக்கப்பட்டுள்ள கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனவு செய்வதற்கான பூரணமான வரப்பிரசாதங்களை விலைக்கு கொள்வனவு செய்வதன் பொருட்டு, 1982 ஆம் ஆண்டு ஓகத்து 20 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்கம் கொண்ட, வர்த்தமானி அறிவித்தலில் மதுவரி ஆணையாளரினால், பிரசுரிக்கப்பட்ட கள்ளினை விற்பனை செய்வதன் நிபந்தனைகளுக்கு, தற்போது நடைமுறையிலுள்ள சகல மதுவரி நிபந்தனைகளுக்கும் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு 2007, செத்தெம்பர் 18 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை குருநாகல் பிரதேச செயலாளரினால், கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கள்ளுத் தவறணை குத்தகை கொள்வனவு செய்வதற்காக முன்வருவோர் உரிய கேள்விப்படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து இங்கு கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டுள்ள கேள்வி வைப்பு பணத்தை செலுத்தி, எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பணம் செலுத்தும் கிளையில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினையும், மேற்கூறப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் கள்ளு விற்பனை தொடர்பான நிபந்தனைகளில் காட்டப்பட்டிருக்கும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்களையும் கடித உறையொன்றினுளிட்டு, அதனை முத்திரையிட்டு அதன் இடது மேல் மூலையில் தாம் கேள்வி கோரும் கள்ளுத் தவறணையின் இலக்கத்தினையும், பெயரினையும் தெளிவாக எழுதி, அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் கடைசி நேரத்துக்கு முன்பாக, கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைப்பதற்கோ அல்லது இப் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இது தொடர்பாக வைக்கப்பட்டிருக்கும், கேள்வி கோரல் பெட்டியில் போடுவதன் மூலமோ குருணாகல் பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்ய முடியும். குறித்த கேள்விப்படிவங்களை சகல பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விதாரர்களினால், கேள்விப்படிவம், பூரணப்படுத்தப்படும் போது, கேள்விப்படிவங்களில் திருத்தப்படும் சகல மாற்றங்களையுமிட்டு அவரது முழு கையொப்பத்தினை இடுவதன் மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு திருத்தமைப்புச் செய்யப்படாத சகல படிவங்களும் நிராகரிக்கப்படும்.

கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2007, செத்தெம்பர் 18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஆகும். சகல கேள்விதாரர்களும் இப்பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

எந்தவொரு காரணத்துக்கும் முன்னறிவித்தல் தரப்படாது, கேள்வி படிவத்தை அல்லது சகல கேள்வி படிவங்களையும் நிராகரிப்புச் செய்யும் உரிமை குருணாகல் பிரதேச செயலாளரையே சாரும்.

தனியான வரப்பிரசாதத்தை பெற்றுக்கொண்ட நபர் என தேர்ந்தெடுக்கப்பட்டதும் சிறந்த கேள்விதாரரினால் அவ்வாறு வெளிப்படுத்தப்படும் திகதியில் பி. ப. 2.00 மணிக்கு குருணாகல் பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்படும் தொகையினை பாதுகாப்பு பிணை வைப்பாக செலுத்தி, விற்பனை நிபந்தனைகளில் கையொப்பம் இடப்படல் வேண்டும்.

2008 ஆம் வருடத்துக்கு தற்போது சாராயத் தவறணைகள் வைக்கப்பட்டிருக்கும் இடத்தையே பெற்றுக் கொடுப்பதற்கு சான்றுப்படுத்தப்படமாட்டாது. தற்போது சாராயத் தவறணைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டிடங்கள் 2008. வருடத்தையிட்டு கிடைக்கப்பெறாதுவிடின் அதற்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய இடத்தின் தன்மையிட்டு கேள்வி அனுமதி வழங்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வெற்றிபெற்ற கேள்விதாரரினால் அவ்விடத்தையிட்டு குருநாகல் பிரதேச செயலாளரிடமிருந்து அனுமதியினை பெற்றெடுத்தல் வேண்டும்.

2007.09.18 ஆந் திகதி குத்தகை விற்பனை செய்ததில் விரும்பத்தகுந்த கோரல்கள் இல்லாதிருப்பின் 2007.10.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் குத்தகை விற்பனை இவ்விடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

மேலதிக விபரங்கள் அவசியமாயின் இப்பிரதேச செயலாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

டப்ளியு. எம். ஜயவர்தன,
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலாளர் அலுவலகம்,

குருணாகல்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
குருணாகல்
2007 ஓகத்து மாதம் 2ஆந் திகதி.

**அட்டவணை**

**குருணாகல் பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் குத்தகை - 2008**

| இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை திறக்கப் பட வேண்டிய பிரதேசம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்வி மூடப்படும் திகதியும் நேரமும் | தவறணை திறக்கப் பட வேண்டிய நேரம் | தவறணை மூடப்பட வேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|---|
| இலக்கம் 02- குருணாகல் | வேஉட வில்லு ஹத்தபத்து | நகரப் பிரிவு இல. 01, 09, 10,11, மற்றும் 12 | ரூபா 3,000 | 2007.09.18 மு. ப. 10.30 | மு.ப. 11.00 மற்றும் பி.ப. 5.00 | பி. ப. 2.00 மற்றும் பி.ப. 8.00 |

8-595

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் உறுப்புரைக்கமைவாக கீழ்வரும் தனியார் கம்பனியானது 2007 யூன் மாதம் 29 ஆந் திகதி ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது :-

கம்பனியின் பெயர் : ஆர். ஆர். அசோசியேட் (பிரைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீ.வீ. 60466
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் :இல. 14, இன்டஸ்ரியல் எஸ்டேட், பல்லேகலை.

செயலாளர்.

8-478

---

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 47/ 53, பெரேரா மாவத்தை, தலங்கமை தெற்கு, பத்ரமுல்லையைச் சேர்ந்த ஞானசிறி வினோதா விக்கிரமசிங்க ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு எம். எம். புவாட் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட, 2004.02.17 ஆந் திகதியுடைய இலக்கம் 3111 கொண்ட அட்டோர்ணி தத்துவப்பத்திரம் மூலம் (பதிவேட்டு இல. 2337,பக்கம் 23 தொகுதி இல. 272, 2004.02.05 ஆந் திகதியிடப்பட்டு கொழும்பு பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பதியப்பட்டது), இலக்கம 47/53, பெரேரா மாவத்தை, தலங்கமை தெற்கு, பத்ரமுல்லை எனும் முகவலியை சேர்ந்த சந்திரா பத்மினி தசநாயக்க அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்ட அட்டோர்ணி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்து முடிவுறுத்துகிறேன்.

ஜீ. வீ. விக்கிரமசிங்க.

24.07.2007

8-481

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : அஷான் அன்ட் அசங்க ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டெட். (Ashan and Asanka Holding (Private) Limited)
கம்பனியின் இலக்கம் : PV 60551 திகதி : 05.07.2007
பதிவு செய்யப்பட்ட முகவரி : 25/1, நாவல வீதி, நுகேகொட.

கம்பனியின் பெயர் : சேவாநிம டிஸ்ட்றிபியூட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட். (Sewanima Distributors (Private) Limited)
கம்பனியின் இலக்கம் : PV 60682 திகதி : 17.07.2007
பதிவு செய்யப்பட்ட முகவரி : 23/A, சுபோதாராம வீதி, தெஹிவளை.

கம்பனியின் பெயர்: ரிஸில்டா ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டெட் (Risilta Holding (Private) Limited)
கம்பனியின் இலக்கம் : PV 60703 திகதி : 18.07.2007
பதிவு செய்யப்பட்ட முகவரி : 6, கீல்ஸ், ஹவுசிங் ஸ்கீம், கலல்கொடை, பன்னிபிடிய.

கம்பனியின் பெயர் : அனீஷா அப்பேறல்ஸ் (பிறைவேட் லிமிட்டெட் (Anisha Apparels (Private) Limited)
கம்பனியின் இலக்கம் : PV 60742 திகதி : 23.07.2007
பதிவு செய்யப்பட்ட முகவரி :54/2, ஸ்ரீ ராஹுல வீதி, கடுபெத்தை, மொரட்டுவை.

செயலாளர்கள் :
எக்கவுண்டன்சி அன்ட் செக்ரெட்டேரியல் சேர்விசஸ் பியுரோ லிமிட்டெட,
இல. 86, எஸ். டி. எஸ். ஜயசிங்க மாவத்தை,
கொதவல, நுகேகொடை.

2007, யூலை 25.

8- 505

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2007 யூலை 06 ஆந் திகதி

கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்:-

*கம்பனியின் பெயர் :* ஓமோ (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* PV 60569
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* தொகுதி 1, கைத்தொழில் பேட்டை பூந்தோட்டம், வவுனியா.

கம்பனி செயலாளர்கள்..
பிறில்லியர் புரோமோட்டர்ஸ் அன்ட்
கொன்சல்ரன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

8- 511

---

## பொது அறிவித்தல்

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) பிரிவின் கீழான அறிவித்தல்

*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 20.06.2007
*கம்பனியின் பெயர் :* வரையறுக்கப்பட்ட மில்க் ஹவுஸ் (தனியார்) நிறுவனம்
*கம்பனி பதிவு இலக்கம் :* PV 60300
*பதிவு செய்த விலாசம் :* இல. 11/61, பசல் மாவத்தை, எதுல் கோட்டை, கோட்டை.

வரையறுக்கப்பட்ட பிசினஸ் பால்ஸ்
(தனியார் கம்பனி செயலாளர்கள்).

இல. 324, கொழும்பு வீதி,
பிலியந்தலை.

8- 512

---

## பொது அறிவித்தல்

கம்பனி பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

### 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 8 (2) பிரிவின்படி 2007.07.13 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது

*கம்பனியின் பழைய பெயர்:* யூயி சிப்பிங் ஏஜன்சீஸ் (பிரைவட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* N (PVS) 15827
*கம்பனி பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல. 45, பிரேபுறாக் வீதி, கொழும்பு - 02.
*கம்பனியின் புதிய பெயர் :* கொஸ்மோ லொஜிஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்.

பிஸ்னஸ்மேட் (பிரைவட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறாக் வீதி,
கொழும்பு 02.
16.07.2007.

8- 523

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது :-

*கம்பனியின் பெயர் :* இவன் எக்ஸ் புரோடக்சன் ஹவுஸ் (பிறைவேட்) லிமிட்டெட், 47, அலெக்சான்றா பிளேஸ், கொழும்பு 7.
*கம்பனி இலக்கம் :* PV 60678
*பதிவு செய்த அலுவலகம் :* 47, அலெக்சான்றா பிளேஸ், கொழும்பு 07.
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 17 யூலை 2007.

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.
கம்பனிச் செயலாளர்கள்,

8-550

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆவது பிரிவில் குறிப்பிடப்படும் கம்பனி கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தலை இத்தால் குறிப்பிடுகின்றோம் :-

*கம்பனியின் பெயர் :* செரன்டிப் இன்டர்நஷனல் வென்சர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், 40, தர்மபால மாவத்தை, மாதிவெல, கோட்டை.
*கம்பனி இலக்கம் :* PV 60224
*பதிவு செய்த அலுவலகத்தின் முகவரி :* 40, தர்மபால மாவத்தை, மாதிவெல, கோட்டை.
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 11 யூன் 2007.

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.
கம்பனிச் செயலாளர்கள்,

8-551

---

## பொது மக்களுக்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ் பீ அன்ட் எஸ் டெக் இன்டர்நெசனல் (பிரைவட்) லிமிட்டெட் (B&S Tech International (Pvt) Ltd., கூட்டிணைக்கப்பட்டது என பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர் :* பீ அன்ட் எஸ் டெக் இன்டர்நெஸனல் (பிரைவட்) லிமிட்டட் (B&S Tech International (Pvt) Ltd,
*பதிவு அலுவலகம் :* 450/31, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு 05
*பதிவு இலக்கம் :* PV 60599

8-579

**கிளீன்கோ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்**

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 9(1) பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

கிளீன்கோ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பெனியொன்று 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி பீவி 60768 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும் புதிய கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இலக்கம் 334 இல் மே/பா அக்பர் பிறதர்ஸில் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

ஈ. எம். அன்ட் ஈ. என். ஏஜென்ட்ஸ் அன்ட்
செக்ரட்டறீஸ் பிறைவேட் லிமிட்டெட்,
கம்பெனியின் கம்பெனிச் செயலாளர்கள்

ஈ. எம். அன்ட் என். கட்டடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு - 00300.

8-613

---

**அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் நிறுவனம் தொடர்பான விடயங்கள் அச்சட்டத்தின் 9 ஆம் சரத்தின் 1 ஆம் உப சரத்தின் விதிகளுக்கமைய இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது :-

நிறுவனத்தின் பெயர் : லுடா (பிரைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : PV60615
பதிவுத் திகதி : 2007, யூலை மாதம் 24 ஆந் திகதி
பதிவு முகவரி : இலக்கம் 9/1, இரண்டாம் குறுக்குத் தெரு, இரத்மலானை

கம்பனி செயலாளர்.

8-625

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் நிறுவனம் தொடர்பான விடயங்கள் அச்சட்டத்தின் 9 ஆம் சரத்தின் 1 ஆம் உப சரத்தின் விதிகளுக்கமைய இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

நிறுவனத்தின் பெயர் : எமெல் இன்ஜினியரிங் (பிரைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : PV60613
பதிவுத் திகதி : 2007, யூலை மாதம் 11 ஆந் திகதி
பதிவு முகவரி : இலக்கம் 9/1, இரண்டாம் குறுக்குத் தெரு, ரத்மலானை

கம்பனி செயலாளர்.

08-626

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளு மற்றும் அந்நிய குடிவகைக்கான தவறணைகள் குத்தகை கொடுத்தல் - 2008

1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டினதும் அதற்குப் பின்னதுமான கால எல்லைக்குள் செல்லுபடியாகும் கள்ளுத் தவறணையினதும் வெளிநாட்டுக் குடிவகைகளையும் (தானியங்களைக் கொண்டு இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் குடிவகை உட்பட) தவறணைகளில் விற்பனை செய்வதை குத்தகைக்கு கொடுப்பதற்கானதும் அக்காலப்பகுதியில் செயற்படுத்தப்படும் சகல கலால் வரி குத்தகைக்கும் உட்பட்டு 2008 ஆம் ஆண்டிற்குள் கீழ்க் குறிப்பிடப்படும் உப அலகுகளில் காணப்படும் கள்ளுத் தவறணைகளிலும் வெளிநாட்டு குடிவகை சாலைகளினதும் (தானியங்களைக் கொண்டு இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் குடிவகை உட்பட) சில்லறை விற்பனையில் தனியுரிமை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக கொத்மலை பிரதேச செயலாளர் மூலமாக 2007.09.04 ஆந் திகதி கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நேரம் வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) சகல கேள்விப்பத்திரங்களும் இத்தீவின் பிரதேச செயலாளர் அலுவலகங்களில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்தி அதன் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்.

(இ) பிரதேச செயலாளரினால் வழங்கிய கேள்விச் சொந்தக்காரரின் சொத்துக்கள் உட்பட அசைவற்ற சாதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சியும் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். கேள்விகளும் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரமும் சமர்ப்பிக்கும்போது கள்ளுத் தவறணைகளும் வெளிநாட்டு குடிவகை சாலைகளினதும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களாக கேள்விக்காரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கீழ்க்காணும் விடயங்களை கேள்விக்காரர் கருத்தில் கொள்ள வேண்டும் :

(1) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித்தொகை எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(2) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சிகளினதும் ஆள் அறிமுக அட்டை இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விக்காரரின் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

4. சிறப்புரிமை பெற்ற கேள்விக்காரர்கள் தமது ஆள் அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி நிபந்தனைகளுக்கு உட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

5. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச்செய்யப்பட்ட பற்றுச்சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரை இடப்பட்ட உறையின் மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும் இலக்கத்தையும் குறிப்பிட்டு பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் பெறப்படவேண்டிய கால எல்லைக்குள் பதிவுத் தபாலில் கொத்மலை பிரதேச செயலாளருக்கு அனுப்ப வேண்டும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளப் படும் இறுதி கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விக்காரர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

எந்தவொரு கேள்விப் பத்திரத்தையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனை தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் கொத்மலை பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்பட்ட மூன்றுமாத தவணைக்கு குறையாத பிணைப்பணமாக கொத்மலை பிரதேச செயலாளருக்கு செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப் பணம் புஸ்ஸல்லாவ – இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக் கணக்கில் எனது பெயரில் வைப்புச் செய்ய குத்தகைக்காரர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசோலையாகவோ அல்லது இலங்கை வங்கி, மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் காசோலை மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும். தேவையான முத்திரைகளைச் செலுத்தி குத்தகைக்காரர் நிபந்தனைகளிலும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

6. நியமிக்கும் தவணைக்கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் தகைமை உடையவராவார்.

7. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2007.10.03 ஆந் திகதி மு. ப. 10.30 மணியளவில் விற்பனை செய்யப்படும்.

9. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமாக முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.

10. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்களை கொத்மலை பிரதேச செயலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஜானக தர்மகீர்த்தி,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலகம்,
கொத்மலை,
2007.07.23.

**அட்டவணை**

| இடமும் பெயரும் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் பெறப்படும் காலம் | கேள்விப்பத்திரம் பிணைப்பணம் ரூபா |
|---|---|---|---|
| **கள்ளுத் தறவணை** | | | |
| 1. கடதொறபிட்டிய | கடதொறபிட்டிய கிராமம் | 2007.09.04 மு. ப. 10.30 | 1,000 |
| 2. ஒத்தலாவ | கேள்விப்பத்திரம் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற இடத்திற்கான அனுமதியை பிரதேச செயலாரிட மிருந்து பெறுதல் வேண்டும் | 2007.09.04 மு. ப. 10.30 | 1,000 |
| 3. கட்டுகித்துல | கட்டுகித்துல கிராமம் | 2007.09.04 மு. ப. 10.30 | 1,000 |

| இடமும் பெயரும் | தவறணை நிறுவப்பட வேண்டிய இடம் | கேள்விப்பத்திரம் பெறப்படும் காலம் | கேள்விப்பத்திரம் பிணைப்பணம் ரூபா |
|---|---|---|---|
| **வெளிநாட்டுக் குடிவகை தவறணை** | | | |
| 1. பூண்டுலோயா | மேட்டுக்கடை வீதி, பூண்டுலோயா | 2007.09.04 மு. ப. 10.30 | 3,000 |

8-552

---

**சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில் அந்நிய மதுபான தவறணை குத்தகை விற்பனை - 2008**

2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2008 ஆம் வருடம் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணைகளுக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாகவே கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையில் இடதுபக்கத்தில் தவறணையின் பெயரையும், இலக்கத்தையும் "................................................ இலக்கம் கொண்ட ...................................................... வெளிநாட்டு மதுபானத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 2007.09.05 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதனை இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.03.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபான குத்தகை நிபந்தனைகளுக்கமைவாக அமைதல் வேண்டும்.

5. 2007.09.05 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் சகல கேள்விப்பத்திரதாரர்களும் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கமைய இதுவரை குத்தகை விற்பனை செய்யப்படாமல் ஏதாவது தவறணை இருப்பின் அவை 2007.10.05 ஆந் திகதி மு. ப. 10.30க்கு மீள் விற்பனைக்கு விடப்படும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல. 032- 2223205.

**அட்டவணை**

| பகுதி | கிராமம் | கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் திகதியும் | மீள் விற்பனை செய்யும் நேரமும் திகதியும் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| சிலாபம் | இல. 07, பிடிபன வீதி, சிலாபம் | 2007.09.05 மு.ப. 10.30 | 2007.10.05 மு.ப. 10.30 | மு.ப. 11.00 பி.ப. 05.00 | பி.ப. 02.00 பி.ப.08.00 | 500 |
| சிலாபம் | இல. 06, பசார் வீதி, சிலாபம் | 2007.09.05 மு.ப. 10.30 | 2007.10.05 மு.ப. 10.30 | மு.ப. 11.00 பி.ப. 05.00 | பி.ப. 02.00 பி.ப.08.00 | 1,500 |

எஸ். ஷானிகாரோஷனி,
உதவி பிரதேச செயலாளர்,
பிரதேச செயலாளருக்காக.

பிரதேச செயலகம்,
சிலாபம்,

8-604

# ஏல விற்பனைகள்

## வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி – காலி கிளை

*1900 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்*

**தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவ, ஹபராதுவ, பிரதேச எல்லைக்குள் தலவெல்லேயில் இருக்கும் பதலிகே வத்த அல்லது மகா விதானகே வத்த எனும் பெயரால் அறிமுகப்படுத்தப்படும் காணித்துண்டை அளந்து வேறாக்கப்பட்ட லொட் 1 உம் லொட் 2 என்ற காணித்துண்டுகள் இரண்டும் அதில் உள்ள கட்டடங்கள் மற்றும் அனைத்தும் ஏல விற்பனை.**

**(விஸ்தீரணம் : லொட் 1 –2றூ 5.6 பேர்ச்சஸ்
லொட் 2– 10.2பேர்ச்சஸ்)**

*(காலி பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். எஸ். மரிக்கார் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் ஹட்டன் நஷனல் வங்கிப் பெயரில் எழுதப்பட்டதுமான 1998.11.09 ஆந் திகதியதும் இலக்கம் 7688 முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் ஸெனரத் ஆனந்த விமலசேன என்பவர் கடனாளராக தவணை தவறியுள்ளார்.)*

வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி என்மீது வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மேல் குறிப்பிடும் சொத்து அமைந்துள்ள இடத்திலேயே 2007.09.03 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**– 2007.03.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.03.20 ஆந் திகதிய "ஐலன்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**–ஏலவிற்பனை முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளர் கீழே குறிப்பிட்ட கட்டணங்களைப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :–

(1) கொள்வனவு விலையில் 10% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் 1%;

(3) ஏல விற்பனையாளரின் தரகுப் பணம் 2 1/2 ;

(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ;

(5) வேறு செலவினங்கள் ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தப்பட்ட கட்டணம் 2,000.

விலைக்கு வாங்கிய பணத்தில் 90% பங்கு பணத்தை 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கிக்கு செலுத்துதல் வேண்டும். 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய 10% த்தை திருப்பிச் செலுத்தாமல் இருக்கவும் சொத்தை மீள விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமைப் பத்திரங்களையும் மேலதிக விபரங்களையும் "முகாமையாளர், ஹட்டன் நஷனல் வங்கி கிளை, (தொ.பே. இல. 091–2232248) அல்லது கொழும்பு 10, ரீ. பீ. ஜாயா ம ாவத்தை, இலக்கம் 479, பிரதான அலுவலகம், பிரதான முகாமையாளர் – (கடன் அறவிடுபவர் (தொ.பே. இல. 2661815, 2661816)" இல் பெற்றுக் கொள்ளலாம்.

என். எச். பி. எப். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும் அதிகாரம்,
பெற்ற ஏலவிற்பனையாளரும்.

இல. 34/31, அல்லது 32,
நீதி சட்டத்தரணிகள் அலுவலகத் தொகுதி,
கொழும்பு 12.

8–548

---

## ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் – முகத்துவாரக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஏல விற்பனை*

**பெறுமதியான சொத்தின் ஏலவிற்பனை**

**மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தில் அளுத்குரு கோரளை ராகம்பற்றுவில் மெத்தேகொடவிலமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பீ. ஜயசேக்கர அவர்களால் 1982.09.11 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 837 இல் குறிப்பிடப்பட்ட பிரிக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் "தெல்கஹவத்த" என அழைக்கப்படும் காணித் துண்டு ஏல விற்பனை**

**(விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 10பே.)**

*(கடமைப்பட்டவரும் ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட்டிற்குச் சொத்தை ஈடுவைத்தவருமான வர்ணகுல பட்டபந்திகே பிரேமலால் புறானோ பெரேரா அவர்கள், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சேனாநாயக்க அவர்களால் 1999.08.26 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 166 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்).*

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ், மேலே விபரிக்கப்பட்ட சொத்தை அதேயிடத்தில், 2007, செத்தெம்பர் 03 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு நான், பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**– ஏலத்தினிறுதியில், சித்திகரமான கொள்வனவாளர், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்தவேண்டும் :–

(1) கொள்வனவு செய்யும் விலையின் பத்துவீதம் (10%) ;

(2) உள்ளூராட்சிகளுக்கான ஒரு வீதம் (1%) ;

(3) ஏலதாரர் தரகுப் பணமாக கொள்வனவு விலையின் 2 1/2% ;

(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 2000/- ;

(5) கிளார்க் மற்றும் கூவுவோர் வேதனமாக ரூபா 500/- ;

(6) மொத்த விளம்பரச்செலவு.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், கொள்வனவு விலையின் எஞ்சிய 90%, ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட்டில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள், காணி உறுதி மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்களை "ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட், (முகத்துவாரக் கிளை) முகாமையாளர் அல்லது தலைமை அலுவலகம் ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட், (கடன் மேற்பார்வை மற்றும் மீளப் பெறுகைத் திணைக்கள) பிரதம முகாமையாளரிடம்" பரீட்சித்துப் பெறலாம். தொலைபேசி :- 2661815, 2661816.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம,
(சமாதான நீதவான் - அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
ஏலதாரர்.

மஹநாம ட்றைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி : 2863121

8-596/1

---

**ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் - பதுளைக் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஏல விற்பனை*

**பெறுமதியான சொத்தின் ஏலவிற்பனை**

**உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். கே. சீ. பிரேமச்சந்திர அவர்களால் 1993, ஜனவரி 13 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 2601 இல் துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட, பிரிக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட, 'தலுக்கஹகும்புற' என அழைக்கப்படும் காணியானது, அதிலுள்ள அனைத்துமுடன் ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில் பதுளை நகரில அளுத்வெலகமவில் அமைந்துள்ளது**

**(விஸ்தீரணம் 10.764 பேர்ச்)**

கடமைப்பட்டவரும் ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட்டிற்குச் சொத்தை ஈடுவைத்தவருமான இரத்நாயக்க முதியான்சலாகே ஜயந்த, பதுளை பிரசித்த நொத்தாரிசு ஜீ. எஸ். கோதாகொட அவர்களால் 1998, சனவரி 07 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 744 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ, மேலே விபரிக்கப்பட்ட சொத்தை அதேயிடத்தில், 2007, செத்தெம்பர் 07 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு நான், பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து, 2007, யூன் 15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007, யூலை 12 ஆந் திகதிய 'ஜலண்ட்', 'திவயின', 'தினகரன்' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- ஏலத்தினிறுதியில், சித்திகரமான கொள்வனவாளர், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்தவேண்டும் ;-

(1) கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%) ;

(2) உள்ளூராட்சிகளுக்கான ஒரு வீதம் (1%) ;

(3) ஏலதாரர் தரகுப் பணமாக கொள்வனவு விலையின் 2 1/2% ;

(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 2000/- ;

(5) கிளார்க் மற்றும் கூவுவோர் வேதனமாக ரூபா 500/- ;

(6) மொத்த விளம்பரச்செலவு.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், கொள்வனவு விலையின் எஞ்சிய 90%, ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட்டில் வைப்பிலிடப்படல் வேண்டும். குறிப்பிடப்பட்டவாறு, 90% ஐ வைப்பிலிட, கொள்வனவாளர் தவறுவாரேயாயின், ஏற்கனவே செலுத்தப்பட்ட, கொள்வனவு விலையின் 10% பறிமுதல் செய்யப்பட்டு, சொத்தை மீளவும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

மேலதிக விபரங்கள், காணி உறுதி, ஏனைய தொடர்புடைய ஆவணங்களை மற்றும் "ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட், கடன்மேற்பார்வை மற்றும் மீள் பெறுகைத் திணைக்கள பிரதம தலைமையலுவலகம், முகாமையாளர்" இடம் பரீட்சிக்கவும் பெறவும் முடியும். தொலைபேசி :- 2661815, 2661816

ரஞ்ஜித்த எஸ். மஹநாம,
(சமாதான நீதவான் - அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
ஏலதாரர்.

மஹநாம ட்றைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி : 2863121

8-596/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.